ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

अहो नु कष्टं यदिमे तपस्विनो रजस्तमोभ्यां विवशा विचेष्टिताः ।
हितेषु मूढा इति चेन्नमे कृपा द्विषत्सु धिङ्मामयथार्थवेदिनम् ॥

"பெரியோர் கண்டால் 'இப்படி இருக்கின்றார்களே, என்று சோகப் படத்தகுந்த நிலைமையிலிருந்துகொண்டுஇந்த ஜனங்கள் ரஜோகுண தமோ குணங்களாலும். அவைகளின் கார்யமான காமம்–மோஹம் முதலியவைகளாலும், பரவசர்களாகி, நல்லகாரியத்தைச் செய்யாமல் தனக்கு வேண்டிய ஹிதத்தைத் தேடிக்கொள்வதிலும் மூடர்களாய்விட்டார்களே? அந்தோ! கஷ்டம்!! என்பதாகத் துவேஷிக்கும் சத்துருக்களிடத்தில் எனக்குக் கருணையுண்டாகவில்லையேயானால் உண்மையறியாத என்னைப்போல் நிந்திக்கத்தக்கவன் யாருமில்லை, என விவேகி உணர வேண்டும். ஸம்சாரவாழ்க்கையில் தன்மயமாயிருப்பவர்கள் தன் கார்யமே பெரிதென்று பாவித்துக்கொண்டு பெரியோர்–சிறியோர் என்றுகூடப் பார்க்காமல் பின்னிட்டுப் பரம ஹிதமாயினும் தற்போது பிரியமாகத் தோன்றாவிடில் அதைச் சொல்லுபவரிடம் பிரீதியைப் பாராட்டமாட்டார்களென்பதுமாத்திரமல்ல. துவேஷத்தையும் செய்பத்துணிந்துவிடுவார்கள். சாந்தநிலையிலிருக்கும் ஸாதுக்களிடமும் தீங்குசெய்யத் தயங்கமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களைப் பெரியோர் கண்டால் "ஹிதம் சொன்னாலும் கேழ்க்கவில்லையே! வெறிபிடித்தாப்போலல்வா முகத்தைத் திருப்பிக்கொண்டு ஓடுகிறார்கள்' இதென்ன ரஜோகுணம்–இதென்ன ராகத்துவேஷம்–இதென்ன தமோகுணம்–இதென்ன மதிமயக்கம். அவைகள் மேலிட்டுவிட்டதால் அவைகளுக்கேயல்லவா அடிமையாகிவிட்டார்கள். நல்லகார்யம்செய்ய நல்லபுத்திவரவில்லையே, இம்மாதிரி தம் ஹிதத்திலேயேமோசம்போகிறவன் உண்டா?" என்று சோகப்படுவார்கள், அத்தகைய ஸாதுக்களின் ஸ்வபாவத்தைக் கண்டு பிரியப்பட வேண்டியிருக்கும்பொழுது பிரியப்படமாட்டார்களென்பதுமாத்திரமில்லை தமது துஷ்டஸ்வபாவத்தால் துவேஷிக்கவும் தலையெடுப்பார்கள். அப்பொழுது ஸாதுக்கள் "அந்தோ! கஷ்டம்!! இப்படியாய்விட்டார்களே என்று கருணையை அடைவார்களேயன்றி கலங்கமாட்டார்கள். உண்மையறிந்தவர்களின் உள்ளம் கலக்கமடையுமா? பிராரப்தவசத்தால் கருணையையடையாமல் ஒருவாறு கலக்கப்படுமானால் இதென்ன நமக்கு இவ்வளவு அறியாத்தனமென்று தன்னையே தனக்குள் இகழ்ந்துகொள்ளுவார்கள். அத்தகைய ஸாதுக்களைக் கண்டால் மரியாதையாய்நடந்துகொள்ளவேண்டும். அவர்கள் சொல்லுவதை ஹிதோபதேசமாகக் கேழ்க்கவேண்டும். அப்படியானால் க்ஷேமப்படலாம். அப்படியே யாவரும் நடத்து நன்மை அடைவாராக.

பத்திராதிபர்,

15½

ஆர்ய தர்மம்.

ப்ரஜாபதி-ஸு மாசி-மீ ௧௫-௨

ஸாதுஸேவை ஸர்வசிரேயஸ்ஸுக்கும் காரணம்.

ஸர்வ ஜனங்களும் சிரேயஸ்ஸையடைய விரும்புகிறார்கள். ஆனால் அதற்கு முக்கிய காரணம் எது? என்பதை ஆராய்ந்து பார்ப்பதில்லை. ஆராய்ச்சி செய்யாவிடில் உண்மை விளங்காது. ஆராய்ச்சிசெய்வதும் ஆப்தர்களான பிரமாணிகர்கள் காட்டிய நியாயவழியாக வரவேண்டுமேயன்றி அனாப்தர்களான அவைதிகர்கள் காட்டும் அநியாயவழியில் வரக்கூடாது. இன்னார் ஆப்தர் இன்னார் பிரமாணிகர்என்பதுகூட தற்காலத்தியவர்களுக்குத்தனக்காகவும் தோன்றுவதில்லை. தார்மிகர் சொன்னாலும் தெரிவதில்லை. இவர்களுக்கு நியூஸ்பேபரே பெரியப் பிரமாணநூலாகிவிட்டது. விகடப்பேச்சு வேதத்திற்கு மேலாகிவிட்டது. நாவல்களே நீதி விளக்கும் நன்னூல்களாய்விட்டன. வைதிகர்வார்த்தை வம்புப் பேச்சாய்விட்டது. இப்படியிருக்கையில் பிரமாணமூலமாக ஆர்ய முறையில் ஆராய்ச்சி எங்கே நேரப்போகிறது, அஃதில்லாமையால் விஷயங்களில் வீணாசையும், வெரும்பேச்சும், வளர்ந்துவிடுகிறது. தன் துர் குணங்களைத் தீர்த்துக்கொள்ள வழி புரியாமல் வைதிகர்களுடைய நற்குணங்களைச் சீர்திருத்தத் திரிகிறார்கள். இந்த சீர்திருத்தத்திற்கு உட்ப்படியாதவர்களிடம் சீறிப் பாய்கிறார்கள். எவ்வளவு துள்ளிவிழுந்தும் சிரேயஸ்காமானநிலை கிடைப்பதில்லை. ஸாது ஸேவை செய்தாலல்லவா சிரேயஸ்ஸு கிடைக்கும். இதைப்பற்றி பாரதாதிகளில் பல இதிஹாஸங்கள் பீஷ்மாசாரியாரவர்களால் தர்மபுத்திரருக்குப் போதிக்கப்பட்டிருக்கின்றன. லக்ஷ்மீதேவியைப்பார்த்து "நீஎங்கு ஸ்திரகாக வாஸம் செய்வாய்" என்று தேவராஜன் பிரார்த்தித்துக்கேழ்க்கும் பொழுது தேவியாரும் "ஸாதுஸேவை செய்யும் ஸஜ்ஜனங்களிடம் ஸதாகாலமும் ஸ்திரமாகயிருப்பேன் அதனாலேயே அவர்களுக்கும் சகல சிரேயஸ்ஸும் கிடைக்கும்" என்று பதிலளித்தார்.

ஸாதுக்களின் ஸமாகமம் நேராவிடில் அங்கு மூதேவி வந்து புகுந்திடுவாள். முன் மூன்று யுகங்களில்ஸாதுஸேவை ஸரிவரயிருந்து வந்தபடியால் சூரிய வம்ச — சந்திரவம்சத்தரசர்களிடமே ராஜ்ய லக்ஷ்மி நிலைத்திருந்தாள். கலிமஹாராஜனுடைய ஆளுகை வந்ததும் யுக்தியும், ஸ்வபுத்தியும்தான் சிறந்ததென்ற துராலோசனையால் ஸாதுசங்கதியொழியவே நம் பாரதநாட்டை விட்டகன்ற ராஜ்ய லக்ஷ்மி மூதேவிக்கிடங் கொடுத்துவிட்டாள்போலும், அதனால் எங்குபார்த்தாலும் பிராணிகளுக்குப் பணப்பஞ்சமும். பாபநெஞ்சமும், துர்பிக்ஷமும், துராசாரமும் மலிந்துவிட்டதைக் கண்டதில்லாமல் வேறு எவ்வித சிரேயஸ்ஸும் கிடைத்ததாகத் தெரியவில்லை. அவனவனும் தன் தன் நலத்திற்காகப் பிரயாஸப் பட்டுத் தனக்குத் தேவையானதைத் தேடிக்கொள்ளுகிறான் என்று நிற்காமல் பிறர்காரியத்தைச் சீர்திருத்துவதற்காகத் தலை எடுக்க என்னநியாயமிருக்கிறது? வைதிகர்வர்ணாசிரமதர்மவழியில் நடந்தால் யாருக்கு என்ன கெடுதி? அதைத் திருத்த ஏன் தலையெடுக்கிறார்கள். 432,0000000, நானூற்றி முப்பத்திரண்டுகோடி வர்ஷங்களானால் ப்ரம்மதேவருக்கு ஒரு பகலாம். இராக்காலமும் அவ்வளவாம். அம்மாதிரி பகலிரவுள்ள நாட்கள்-360 கொண்டது அவரது ஓர்வருஷமாம். இம்மாதிரி வருஷக்கணக்கில் ப்ரம்மதேவருக்குத் தற்போது 50வயது,ஆயிருப்பதாகக் கணிதசாஸ்திரம் பயின்றவர் கூறுகின்றார். அதற்குள்ள வருஷங்கள் 155520000000000, இவ்வளவு ஆகின்றன. இவ்வளவு வருஷ காலமாக வைதிகவாஸனையேறின ஆர்யர்கள் மனதில் நேற்று வந்த சில திருத்தக்காரர்களின் கொள்கை எங்ஙனம் புகும். புண்ணிய பாபங்களுண்டு பரலோகமிருக்கிறது என்று நம்பிப் பாபத்திற்குப் பயந்து நரகத்திற்கு நடுங்கிநிற்பவரை இங்குமங்குமாய் இழுத்தால் என்னசெய்வார் நமுசி-விருத்திராஸுரன்-சூரபத்மா முதலியவர்கள் செய்வதாகச் சங்கற்பித்த கார்யத்தைச்சொன்ன கெடுவில் செய்துமுடிக்கும் தபஸ் சக்திவாய்ந்தவர்களாயிருந்தும், கடைசியில் கெடுதியடைந்தார்களேயன்றி நன்மைபெறவில்லை. அதற்குக் காரணம் தர்மத்தைத்தள்ளிவிட்டதைத்தவிர வேறொன்றுமில்லை. அப்படியிருக்கையில் எவ்வித சக்தியும் பெறாத திருத்தக்காரர் சொல்லுவதைக் கேட்டு புராதனமான பாத்தியத்தை இழந்து ஸாதுஸேவையை விடுவதெப்படி?என்று தீர்க்காலோசனை

செய்து அவசரப்பட்டுவிடாமல் ஸாதுஸேவைசெய்து பிரமாண மூலமாக ஆராய்ச்சிசெய்து எது நிச்சயத்திற்கு வருகிறதோ அதைச் செய்யவேண்டும். அதிலிருந்து சர்வ சிரேயஸ்ஸையும் யாவரும் அடையவேண்டும். சுபம்.

பத்திராதிபர்.

உபதேச ஸாரம்.

பௌத்த சார்வாகாதி தந்திரகாரர்களின் தாத்பர்யம்.

அதிப்பிராகிருதர் கொண்ட புத்திராத்தும வாதம் முதல் அனேக நாஸ்திக மதங்கள் நிரூபிக்கப்பட்டதில் அவைகளும் ஸோபான பாம்பரையாய் பரமஸித்தாந்தபக்ஷத்திற்கு உபயோகப் படுமென்ற கருத்தாம். இந்த மதப் பிரவர்த்தகர்கள் பிருஹஸ்பதி முதலியவர்களாகையால் பாம்பரையாய் வேத மார்க்கத்திற்கு ஸாதகமாகட்டுமென்ற அபிப்பிராயத்தால் அவைகளை வெளியிட்டதாகச்சொல்லுவதுதான் யுக்தம். நாஸ்திகக்கொள்கையை ஸ்தாபிப்பதில் அவர்களுக்கு தாத்பர்யமிராது. ஸர்வக்ஞர்களாதலால் பரமசித்தாந்தத்திற்றான் அவர்களுக்கும் தாத்பர்யமிருக்கும், அங்ஙனமே வியாஸ தாத்பர்ய நிர்ணயத்தில்—

एवमेव बौद्धचार्वाकादि बाह्यतन्त्राणामपि तात्पर्यं द्रष्टव्यम् । बौद्धचार्वाकादि बाह्यतन्त्रप्रणेतृभिः भगवद्बुद्ध–बृहस्पतिप्रभृतिभिः केवलाद्वैतमेवाभ्युपगतमितिश्रीमत्सूतसंहितादि पुराणेषु प्रतिपादनेन तदीयतन्त्राणामपि तत्रैव तात्पर्यवर्णनस्य युक्तत्वात् ।

"இம்மாதிரியே பௌத்த சார்வாகாதி வேதபாஹ்ய தந்த்ரங்களுக்கும் தாத்பர்யம் கண்டுகொள்ளவேண்டும். ஏனெனில் பௌத்த சார்வாகாதி வேதபாஹ்யதந்திரங்களை இயற்றிய புத்ததேவர் பிருஹஸ்பதி முதலியவர்கள் கேவல அத்வைதவாதத்தையே முக்கியமாய் அங்கீகரித்திருக்கிறார்களென்று ஸ்ரீஸூதஸம்ஹிதைமுதலிய புராணங்களில் நிரூபித்திருப்பதால் அவர்களியற்றிய தந்திரக் கிரந்தங்களுக்கும் அதிலேயே தாத்பர்யம் பாம்பரையாகவாவது வர்ணிப்பதுதான் யுக்தமாயிருப்பதாலாமென்க. ஆனால் மிகவும் மந்தமதிகளாயுள்ளவர்களை தத்துவ ஞானவழியில் கிரமமாய்த்

திருப்பவேணுமென்ற உட்கருத்தால் அவர்கள் மனதிற்றேன்றி யதை அனுவதித்துப் பேசினர்களே தவிர வேறில்லை, அங்ஙனமே ஸூதஸம்ஹிதையில்—

तेऽपि मन्दमतीनां च महामोहात्मनाम् ।
वांछामात्रानुगुण्येन प्रवृत्ता न यथार्थतः ॥

"அந்த வேதவிருத்தமான நாஸ்திகமதங்களும் மஹாமோஹத்தி லீடுபட்டு மயங்கிக்கிடக்கும் மந்தமதிகளின் நோக்கத்தைமாத்திரம் அனுஸரித்துப் பிரவிருத்தித்தனவேயன்றி உண்மையிலேற்பட் டவை அல்ல'' என்றும்—

दर्शयित्वा तृणं मर्त्यो धावन्तीं गां यथाऽग्रहीत् ।
दर्शयित्वा तथा तेषामिदं पूर्वं महेश्वरः ॥

"வெறிபிடித்து ஓடும் பசுவை மனிதன் அதற்குப் பிரியமான புல் லைக் காட்டி வசப்படுத்தித் தன் வழிக்குத் திருப்பிக்கொண்டு வருவதுபோல் ஸர்வக்ஞனை பரமேசுவரனும் மஹா மந்தபுத்தி களுக்குபிரியமான அந்தந்தவாதத்தைபிருஹஸ்பதிமுதலியவர்கள் மூலமாக முதலில் காண்பிவித்துப் பிறகு தன்வழியில் திருப்பிவிடு வார்'' என்றும் கூறப்பட்டிருக்கிறது. அங்ஙனமே ஸ்ரீ அய் யண்ணதீக்ஷிதரவர்களியற்றிய வியாஸ தாத்பர்ய நிர்ணயமென்ற கிரந்தத்தில்—

ननु सकलश्रुतिस्मृति पुराणादिषु वैदिकव्यतिरिक्ततन्त्राणामग्राह्यत्व-प्रतिपादनात् कथं तेषां वेदान्तशास्त्रोपयोगित्वोपपादनम्– इतिचेत्–

"ஸகல சுருதிஸ்மிருதி புராணுதிகளில் வைதிக ஸித்தாந்தம் தவிர மற்ற தந்திரமார்க்கங்கள் கிரஹிக்கத்தக்கதல்ல என்று சொல்லி யிருப்பதால் பௌத்த சார்வாகாதி நாஸ்திக மதங்கள் வேதாந்த சாஸ்திர ஸித்தாந்த பக்ஷத்திற்கு உபயோகப்படுவதாகக் கூறுவ தெப்படி? என்று ஆசங்கை செய்துகொண்டு அதற்குப் பரிஹாரம்—

सत्यं ? तेषुतन्त्रेषु अवान्तरतात्पर्येण तत्तन्त्रसिद्धान्तत्वेन प्रतिपाद्य-मानस्य वेदान्तविरुद्धार्थस्यैव पारमार्थिकत्वबुद्धयातेषामनुपादेयत्वेऽपि उक्तरीत्या तेषां तन्त्राणामपि परंपरया वेदान्तशास्त्रोपयोगित्वमिति बुद्धया उपादेयत्वेन तदुपपादनसंभवात् ।

"சொல்லுவது சரிதான். இந்த நாஸ்திக தந்திரசாஸ்திரங்களில் அவாந்தர தாத்பர்யத்துடன் அந்தந்த தந்திரஸித்தாந்தமாகக்கூறப்படும் வேதாந்த சாஸ்திரவிருத்தமான விஷயங்கள் பாரமார்த்திக புத்தியால் கிரஹிக்கத்தகுந்தவைகளல்லவாயினும் கீழ்க்காட்டிய ரீதியாக அந்த தந்திரங்களும் விரோதப்படாத விஷயங்களைக் காட்டி பரம்பரையாய் வேதாந்த ஸித்தாந்தத்திற்குவா உபயோகப்படும் என்ற கருத்தால் அவைகளில் கூறப்படும் விரோதப்படாத விஷயங்கள் கிரஹிக்கத்தக்கவைகளாகும்" என்று கூறப்பட்டது. எந்த ரீதியாய் நாஸ்திக தந்திரங்கள் வேத ஸித்தாந்தத்திற்கு உதவுகின்றனவென்பதும் ஆங்கே விரிவாகக் கூறப்பட்டது. அதாவது—

देहात्मत्वादि विरुद्धांश प्रतिपादकवचनानां तु अनेक जन्मार्जित-दुरितवासनाऽऽक्रान्त पुरुषविशेषाणां झटिति देहविलक्षणात्मज्ञानासंभवेन स्थूलारुन्धतीन्यायेन देहविलक्षणात्मज्ञानोपयोगित्वात् ।

"தேஹாத்துமவாதம் முதலியவேதவிருத்தங்களான விஷயங்களை நிரூபிக்கும் சார்வாகதந்திர வசனங்களோவெனில் அந்த அம்சத்தில் தாத்பர்யமுடையவையல்ல. ஆனால் ஸூக்ஷ்மமான அருந்ததீ நக்ஷத்திரத்தைக் காட்டவந்தவன் முதலிலேயே அதைக் காட்டுவது அஸாத்தியமென்று அதற்கு ஸமீபத்திலுள்ள ஸ்தூல நக்ஷத்திரத்தை முதலில் அருந்ததியென்று காண்பிவித்துப்பிறகு அதை நிஷேதித்துவிட்டு அதற்கு சமீபத்தில் ஸூக்ஷ்மமாயிருக்கும் வாஸ்தவ அருந்ததீ நக்ஷத்திரத்தைக் காட்டுவதுபோல்—அநேக ஜன்மங்களிற் செய்யப்பட்ட பாப கர்ம வாஸனையால் ஆக்ரமிக்கப்பட்டு விஷயங்களிலேயே இழுக்கப்பட்ட ஸ்தூல திருஷ்டிகளுக்கு சீக்கிரத்தில் தேஹாதி விலக்ஷணமான அதிஸூக்ஷ்ம ஆத்தும தத்துவத்தின் ஞானம் ஸம்பவிக்காதாகையால்முதலில் அவர் கொண்டதையே அனுவதித்து அதில் அநேக தோஷங்களைக்காட்டி நிஷேதித்துவிட்டு பரம்பரையாய் பரமஸூக்ஷ்மமான ஆத்துமவஸ்துவைக் காட்டுவதில்தான் தாத்பரியமாம். இந்த ரீதியாய் சார்வாக தந்திரம் உபயோகப்படுகிறது. இதுபோலவே பௌத்தாதி மதக்ரந்தங்களிலும் தாத்பரியம் காண்க. அதுவும்—

तत्रत्य प्रपञ्चशून्यत्वादि प्रतिपादकवचनानां प्रपञ्चस्य हेयत्वसूचनद्वारा केवलाद्वैतज्ञानोपयोगि वैराग्यसंपादकतया चरितार्थत्वेन प्रपञ्चशून्यत्वे तात्पर्याभावात् ।

"பௌத்த மதக்கிரந்தங்களிலும் "பிரபஞ்சம் முற்றும் சூன்யம்" என்பதாதியாக சூன்யவாதத்தைப் போதிக்கும் வசனங்களும்— "பிரபஞ்சமென்பது மிகவும் துச்சமானவஸ்து, ஆகவே இது தள்ளத்தக்கதேயல்லது இதில் பாரமார்த்திக ஸதம்சமே கிடையாது" என்று ஸூசிப்பித்து இந்தவாயிலாக கேவலாத்வைத ஞானத்திற்கு உபயோகியான வைராக்யத்தை உண்டுபண்ணுவதில் தாத்பர்யமுடையனவேயன்றி பிரபஞ்சசூன்னியத்துவத்தில் தாத்பர்யமுடயவையல்ல. இந்த ரீதியாய் சூன்யவாதி தந்திமுருயோகப்படுகிறது. இதுபோலவே க்ஷணிகத்துவாதிவாதங்களும் வைராக்கியத்தை உண்டுபண்ணுவதிலேயே தாத்பர்யமுடையனவாம், "இப்படி சிரமப்பட்டு நாஸ்திகதந்திரங்களுக்குக்கூட தாத்பர்யம் கற்பிப்பானேன்? அவை முழுவதும் வேதவிருத்தங்களானதால் எவ்விதத்தாலும் பிரமாண்யமுடையவையல்ல என்றே கற்பித்து விடலாமே? அங்ஙனமே சில விடங்களில் கூறப்படுகின்றது. அந்தந்த மதப் பிரவர்த்தகாளான பிருஹஸ்பதி முதலியவர்கள் அப்படிச் சொல்லுவார்களா? என்ருல்— பிரஜைகளிடத்தில் துவேஷங்கொண்டு ஏமாற்றுவதற்காக அப்படிச் சொல்லலாமல்லவா? प्रद्वेषो वा प्रजासु என்றிருக்கின்றதல்லவா? என்று சங்கை வரலாம். அது பொருந்தாது. ஸர்வக்ஞர்களாயுள்ளவர் எப்படியாவது பிராணிகளை கரையேற்றிவிட வழிதேடுவார்களா? கெடுத்துவிட வழிதேடுவார்களா? என்று ஆலோசிக்கவேண்டும். அறியாதவர்களைக் கெடுத்துவிடுவதால் அவர்கள் அடையும்பயன்யாது. ஒன்றுமில்லை. ஆகையால் இப்படி அபிப்பிராயம் கற்பிப்பதைவிட பரம்பரையாகவாவது பரமார்த்த வழியில் உபயோகப்படுத்துவதாகத் தாத்பரியம் கற்பிப்பதே நன்று. இவ்விதமாக ஸாத்துவிக முறையில் பிரவேசித்து எல்லா இடங்களிலும் குணங்களையேகிரஹித்துக்கொள்ளும் ஆஸ்திகர்கள் நாஸ்திகதந்திரங்களின் உட்கருத்தையறியாமல் நாஸ்திகவாதத்திலேயே ஆக்கிரஹிக்கப்பட்டுப் பேசுபவர்களைக் கண்டித்து ஆஸ்திகமதத்தை பாவச்செய்திருக்கிருர்கள்".

ஆஸ்திகமதம்.

ஆஸ்திகமதமும் ஆறுவிதமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் ஸோபாநாரோஹணக் கிரமமாக கேவலாத்துவைத வாதத்திலேயே கருத்துக்கொண்டது. நாஸ்திக தந்திரங்களுக்கே இக் கருத்திருப்பதாகக் கொண்டால் ஆஸ்திக சாஸ்திரங்களுக்குக் கேழ்க்கவேண்டுமோ? அங்ஙனமே—

यथा तोयप्रवाहाणां समुद्रः परमावधिः ।
तथैव सर्वमार्गाणां साक्षान्निष्ठा महेश्वरः ॥

"ஸர்வஜலப் பிரவாஹங்களுக்கும் ஸமுத்திரம் முடிவு எல்லையாயிருப்பதுபோல பௌத்த சார்வாகாதி ஸர்வ நாஸ்திக மார்க்கங்களுக்கும், நியாய—மீமாம்ஸாதி ஸகல ஆஸ்திகமார்க்கங்களுக்கும் முடிவு எல்லையாயுள்ளவன் பரமேசுவரன் ஒருவனே" என்று ஸ்ரீ ஸூத ஸம்ஹிதையில் வர்ணிக்கப்படுகிறது. புஷ்பதந்தஸ்துதியிலுமிக்கருத்து—

त्रयी सांख्यं योगः पशुपतिमतं वैष्णवमिति प्रभिन्ने प्रस्थाने पर-मिदमदः पथ्यमिति च। रुचीनां वैचित्र्या दृजुकुटिल नाना पथजुषां नृणामेको गमस्त्वमसि पयसामर्णव इव ॥

"வேதஸித்தாந்தம்—ஸாங்கியமதம்—யோகமதம்—பாசுபதமதம் வைஷ்ணவமதம்—இம்மாதிரி விரிந்து கிடக்கும் பலப் பிரஸ்தானங்களுள் இது சிறந்தது— இது பத்தியமாயுள்ளது, என்று அவரவர்களின் மனதிற்கு உருசித்தவாறு ருஜுவாயும், குடிலமாயுமுள்ள பலவழிகளைப்பற்றி நிற்கும் பிராணிகளுக்கெல்லாம் ஸர்வ ஜலங்களுக்கும் ஸமுத்திரம்போல் நீயொருவனே அடையத்தக்கவன்" என்று வெளியிடப்பட்டிருக்கிறது. ஆஸ்திகமதம் ஆறுவிதம் என்பது எப்படியெனில்—

कणादस्याक्षपादस्य व्यासस्य कपिलस्य च ।
पतञ्जले जैमिनेश्च दर्शनानि भवन्ति षट् ॥

கணாதர்—கௌதமர்—வியாஸர்—கபிலர்—பதஞ்சலி—ஜைமினி ஆகிய மகரிஷிகள்வெளியிட்ட ஆறுமதங்களே ஆஸ்திகஷட் தர்சனங்கள் ஆகின்றன,, என்று பெரியோர் அபிப்பிராயப்படுகிறார். இவற்றுள் கணாதமதம்—கௌதமமதம் இவ்விரண்டும் தர்க்க

மதமென்றும், கபிலமதம்—பஞ்சசிமதம் இவ்விரண்டும் ஸாங்கிய மதமென்றும், ஜைமினிமதம் — வியாஸமதம் இவ்விரண்டும் மீமாம்ஸா மதமென்றும் வியவஹரிக்கப்படும். சிறு குழந்தைகளுக்குத் தன் ஹிதம் தனக்கே தோன்றாமலும், பிறர் சொன்னாலும் தெரியாமலும் தான் பிடித்த முறட்டுப் பிடிவாதப் படியே—எப்படியிருந்தாலு மிவர்கள் (தாய்தந்தைகள்) நம்மை விட்டுவிட மாட்டார்களென்று பிராசீன வாஸனா பலத்தால் ஏற்பட்ட அசட்டுத் துணிச்சலால்— பேசிக்கொண்டிருப்பது ஸ்வபாவம். இதுபோலவே கருணாமூர்த்திகளான ஸர்வக்ஞ சிரோமணிகளான ஸாதுக்கள் நாம் எப்படி நடந்தாலும் விட மாட்டார்களென்ற அசட்டுத்துணிச்சலால் "ஸர்வமார்க்கங்களும் ஒரேவிடத்தில் முடிவுபெறக்கூடியது" என்ற உண்மைக்கருத்தை உணராமலும், அந்தந்த தந்திரங்களால் ஏற்படும் உதவி இன்னதென்று தெரிந்துகொள்ளாமலும் மேலெழுந்த வாரியாய்த் தோன்றுவதே சார்வாகமதத்தின் கொள்கையென்று தோன்றிய வாறு சிலர் பேசிக்கொண்டிருப்பார்கள். குழந்தைகளின் ஹிதத்தைக் கோறினவர்கள் அவர்கள் நோக்கப்படி விட்டுத் திருப்புவதுபோல ஸர்வக்ஞர்களான ஆஸ்திகர்களும் அவர் வழியேவிட்டுத் திருப்புவார்கள். அதில் முதல் சார்வாக மதஸ்தர்களிடம் பேசத்தலைப்பட்டவர்கள் தார்க்கிகர்களாம். அவர்கள் நாஸ்திகக் கொள்கையை மாற்றி வேதப்பிராமாண்ணியத்தையும் சரீராதிரிக்தஆத்துமவாதத்தையும்ஸ்தாபித்தார்கள். அதுவருமாறு.

பிழைபொறுத்தருளும் பெரியோருள்ளம்.

உலகத்தில் ஜீவராசிகள் கணக்கற்றபிறவிகளில் புல்லாகவும் பூண்டாகவும் மிருகங்களாகவும் பிறந்து அளவுகடந்த துன்பங்களை அனுபவித்தபின்னர் புண்ணிய பாப ஸாம்யத்தினால் மனிதராய்ப்பிறக்கின்றார்க்ள். அது மிக அரிது. அங்ஙனமே **जन्तूनां नरजन्म दुर्लभमिदं** அரிது அரிது மானிடராதல் அரிது. என்றும் பெரியோர்கள் புகழ்கின்றார்கள். பகுத்தறிவால் ஆராய்ந்து மெய் அறிவுபெற்றுத் துலங்குவதே மானிடப் பிறவியின் உயர்வுக்குக் காரணம், இவ்வருமையான மானிடப்பிறவியடைந்தும் சரீரத்தைத்தாங்கிநிற்கும் "நான்" என்பதுயார் என்று ஆராய்ந்து பகுத்தறியும்வண்ணம் அறிவுநூல்களை ஆராய்தலை விட்டுப்போட்டு 'நான்'

'எனது' என்னும் எண்ணங்கள் தடித்து ஆஹார நித்திரை முத லான மிருகங்களுக்குரிய வியாபாரங்களே மிகுந்து பிறர்காரி யத்தைக் கெடுத்தேனும், சுயநலத்தை நாடுதலாகிய ராக்ஷஸ ஸ்வ பாவம்வாய்ந்தவர்களாய் மனித உருவம் தாங்கித்திரியினும் மனித உணர்ச்சியில்லாதவர்களாக அநேக ஜனங்கள் இருந்துவருகின் றார்கள். இப்பேர்ப்பட்ட கீழ்மக்கள் தங்களுக்கு ஒருவன் நூறு நன்றிசெய்தபோதிலும்"ஈரமில்லாநெஞ்சத்தவருக்குசெய்த உபகா ரம் நீர்மேலெழுத்துக்குநேர்'' என்னும்ஔவையார்முதுமைக்கிரங்கி உபகாரங்கள் அனைத்தையும் மறந்துவிட்டு தினையளவுதீங்கு அறி யாது செய்துவிட்டால் பனையளவாகக்கொண்டு வைராஞ்சாதித்து தீங்கிழைக்கக்காத்திருப்பர். இவ்விதம்பிறவுயிர்களிடமிரக்கமில்லாத வர் "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வருமோ ஏதுநேருமோவறிக லேம்'' என நடுக்குற்று "தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந் தார்க்கல்லது மனக்கவலை மாற்றலரிது'' எனத்தெளிந்து மாயப் பிறவிதீர்க்கும் மாயவன் அருள்பெறுதலைத் துறந்து கடவுளால் மெய்யறிவை அடைவதன்பொருட்டு கொடுக்கப்பட்ட மனித சரீ ரத்தை வீணாக்குவதால் தம்முயிர்க்கும் உறுதிசெய்துகொள்ளா ததால் ஆத்மத்ரோகிகளாகவும் ஆகின்றார்கள். அங்கிங்கெனாத படி எங்கும்நிறைந்திருக்கும் கருணாநிதியான இறைவனின் ஆலயங் களே உயிர்களுக்கு நிலைக்களமாகிய உடம்புகள் எல்லாம்,, என்ற உணர்வுபெறாமல் இதரர்களை த்வேஷிப்பவர்களை ஈனப்பிறவிகளில் பிறக்கும்படி செய்வதாக பகவான் கீதையில் சொல்கிறார்

> अहंकारं बलं दर्पं कामं क्रोधं च संश्रिताः
> मामात्मपरदेहेषु प्रद्विषन्तोऽभ्यसूयकाः ।
>
> तानहं द्विषतः क्रूरान् संसारेषु नराधमान्
> क्षिपाम्यजस्रमशुभानासुरीष्वेव योनिषु ॥

மானிட சரீரமிருக்கும்பொழுதே மெய்யறிவையடையாதவர்களுக்கு பெரிய நஷ்டத்தையும் தன்னை அறிந்துகொண்டவர்களுக்கு நித்தி யானந்த வாழ்வையும் சுருதி முறையிடுகின்றது. இவ்விதம் மிகப் பெரிய நஷ்டத்தையடைந்துவரும் மனிதர்களுடைய மிருக உணர்ச்சி நீங்கி தெய்வீகவருளாகிய மனிதஉணர்ச்சி தழைத்துப் பேரன்பும் பேரறிவும் ஓங்குவதற்கே தபோதனர்கள் இன்றைக் கும் அருந்தவமிழைக்கின்றார்கள்! நல்லறிவு நல்லொழுக்கம் இவை

களால் முதிர்ந்த பெரியோர்களோ இயல்பாகவே எல்லாவுயிர்கள் மேலும் செல்வத்தாகிய கருணையுடையவர்களாய்,

अकरुणत्वमकारणविग्रहः परधने परयोषिति च स्पृहा ।
सुजनबन्धुजनेष्वसहिष्णुता प्रकृतिसिद्धमिदं हि दुरात्मनाम् ॥

'என்று சொல்லியவண்ணம் இழிவான குணங்கள் உள்ளவர்களான, மூவாசையை வெல்லுவதற்கு ஆண்மையற்று காமக்ரோதாதிகளுக் கடிமைபூண்ட அறிவினர்களால் இழைக்கப்படும் தவறுகளை பொறுப்பதுடன் நில்லாது

मनसि वचसि काये पुण्यपीयूषपूर्णा स्त्रिभुवनमुपकारश्रेणिभिः प्रीणयन्तः। परगुणपरमाणून् पर्वतीकृत्य नित्यं निजहृदि विकसन्तस्सन्ति सन्तः कियन्तः ॥

என்று பத்ருஹரி உரைத்தவிதமாக அவர்களிடம் கடுகளவு குணம் காணப்பட்டபோதிலும் மலையளவாகச்செய்து புகழ்ந்து "ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்கு பொன்றுந் துணையும் புகழ்" "இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர் நாணநன்னயம் செய்துவிடல்" என்னும் தெய்வப்புலமை திருவள்ளுவர் நீதி நெறியை சிரமேற்கொண்டு அபகாரத்திற்கு பதிலாக உபகாரம் செய்து அவர்களுக்கு பச்சாத்தாபம் உண்டாகச்செய்து, மேலே பாபம் செய்யாவண்ணம் செய்து ஆண்டவனருளுக்கு பாத்திரமாக்கி நல்வழிப்படுத்துகின்றார்கள். ஞானிகளாகிய ஆன்றோர்கள் தங்களை பிறர்கள் வைதிடினும் வாழ்த்திடினும் இன்பதுன்பங்கள் கோடிசெய்திடினும் எல்லாம் ஈசன்செயல் எனத் தெளிவரேயன்றி, உண்மை நெறியினின்றும்பிறழ்ந்து அவர் செய்தார் இவர் செய்தார் என்று விருப்பு வெறுப்புக் கொள்ளமாட்டார்கள்.

"வினைப்பயனை வெல்லுவதற்கு வேதமுதலாம் அனைத்தாய நூலகத்தும் இல்லை" "ஒறுத்தாரை என்செய்யலாம் ஊரெல்லாம் ஒன்று வெறுத்தாலும்போமோ=(நம்) தீவினையாலேதீண்டப்பட்டுத் தீங்கிழைத்தாரை நாம் என்செய்வோம் ஊரிலுள்ளவெல்லோரும் சேர்ந்து வெறுத்தாலும்போமோ'' ஏவினவனிருக்க அம்பை நோவதாலென்ன பயன் என்று எண்ணி இறைவனால் ஜீவர்களின் கர்மானுகுணமாக கொடுக்கப்படும் தண்டனைகள், ரண வைத்யர்

களால் செய்யப்படும் விபாதியாளர்களுடைய அவயவங்களைக் கூறுபடுத்தல், இரும்புக்கோல் காய்ச்சி சுடுதல் முதலிய சிகித்஛ைகள் போல், ஜீவர்களின் நன்மையின்பொருட்டே கொடுக்கப்படுவதால் நன்றென்றும் தீதென்றும் தானென்றும் அவனென்றும் கருதாது சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒருநாளுமில்லை என்ற சிந்தையுடன் "நடுவு நின்றார்க்கன்றி ஞானமுமில்லை, நடுவுநின்றார்க்கு நாகருமில்லை, நடுவுநின்றார் நல்ல தேவருமாவர், நடுவு நின்றார்வழி நானும் நின்றேன்" என்று திருமந்திரத்தில் திருமூலர் சொல்லியவண்ணம் நடுவுநிலைமையில் நிற்பார்கள். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்து சமயகோடிகள் எல்லாம் என் தெய்வம் என்தெய்வமென்று கொண்டாடி தங்கும்படிக்கிச்சை வைத்து உயிர்க்குயிராய்த் தழைத்துமனவாக்கிற்கெட்டாதிருந்து உள்ளன்போடுவேண்டும் அடியார்கட்கமிர்தஸஞ்சீவியாகி கருணை பொழிந்தின்பமூட்டும் அருட்பொருளாய்விளங்கும்" பரமேச்வரன் அருள்வேண்டில் சராசராத்மகமான ஸமஸ்த ஜகத்தும் பரமாத்மா ஸ்வரூபமெனவறிந்து, நிஷ்காமமாக. உயிர்கண்மேலிரங்கி பரோபகாரம் செய்யவேண்டும். பிரதிப்பயனை எதிர்பாராது உபகாரம்செய்வதே குணவான்களினியற்கை.

கிருஷ்ணன்.

மனுஸ்மிருதி அத்தியாயம்–2.

சில வசனங்கள்.

1. கர்ப்பகாலத்தில் செய்யப்படும் பும்ஸவநமுதலான ஹோமங்களாலும் பிறந்தபிறகுசெய்யப்படும்ஜாதகர்மம்,நாமகரணம்,அன்னப்பிராசனம், சௌளம்,உபநயனம் ஆகிய ஸம்ஸ்காரங்களாலும் அகாலஸம்ஸர்க்கம் தகப்பன் தாய் கர்ப்பவாஸ தோஷங்கள், பிராமண, க்ஷத்ரிய, வைசியர்களை விட்டு விலக்கப்படுகின்றன.

2. வேதப்படிப்பினாலும், ஆஹார நியமங்களாலும் ஔபாஸநங்களாலும், மூன்றுவேதார்த்தங்களையும் தெரிந்துகொள்வதாலும், தேவ, ரிஷி, பித்ரு,தர்ப்பணங்களாலும், புத்திரர்கள் உண்டாவதாலும், வைசுதேவமுதலான மகாயக்ஞங்களாலும், ஜோதிஷ்டோமாதியாகங்களாலும், சரீரம் மோக்ஷமடையத்தகுந்ததாக ஆகிறது,

3. தொப்புள்கொடியறுப்பதற்கு முன் பிறந்த பிரஜைக்கு ஜாதகர்மா செய்யப்படுகிறது. தனக்குரிய கிருஹ்ய ஸூத்திரப் பிரகாரம் மந்திரம் ஜபித்துத் தங்கத்தால் தொட்ட தேன், நெய்யை சிசுவின் நாவில் தடவவேண்டும்.

4. சிசு பிறந்த பத்தாவது அல்லது பனிரெண்டாவது தினத்தில் நல்ல திதி, முஹூர்த்தம், நக்ஷத்திரம்கூடியபொழுது நாமகரணஸம்ஸ்காரத்தைச்செய்விக்கவேண்டும்.

5, பிராமணனுக்கு மங்களத்தையும் (விஷ்ணுமித்திரன் முதலானது) க்ஷத்திரியனுக்கு பலத்தையும் (நரஸிம்மன் முதலானது) வைசியனுக்கு பொருளையும் (தனபதிமுதலானது) சூத்திரனுக்கு ஸேவையையும், (கிருஷ்ணதாஸன் முதலானது) குறிக்கும் பெயரையும் கொடுக்கவேண்டியது.

6. பெயரின் பின்பாகம் பிராமணனுக்கு சர்மா என்றும், க்ஷத்திரியனுக்குவர்மா என்றும், வைசியனுக்கு குப்தபூதி என்றும், சூத்ரனுக்கு தாஸன் என்றும், இருக்கவேண்டியது.

7. பெண்களின் பெயர் தேவி, யசோதை என்பதுபோல் சுகமாய் உச்சரிக்கத்தக்கதாயும் கொடுமையைக் காட்டாததாயும் ஸ்பஷ்டமான அர்த்தத்தையுடையதாயும், மனதுக்கு இன்பத்தைக் கொடுக்கத்தக்கதாயும், மங்களத்தைக்காட்டுகிறதாயும், கடையில் நீண்ட அக்ஷரத்தையுடையதாயும், ஆசீர்வாதமாயும், இருக்க வேண்டும்.

8 பிறந்த வீட்டிலிருந்து சிசுவைநான்காம்மாதத்தில்சூர்யனைக்காட்ட வெளியில்கொண்டுபோகவேண்டும் ஆறுவதுமாதம் அன்னம்புகட்டவேண்டும். குலாசாரத்தையனுசரித்து எந்தஸம்ஸ்காரத்தையும் இஷ்டப்படிச் செய்யவேண்டும்.

9. வேத வசனப்படி குலாசாரத்தை அனுஸரித்துப் பிராமண, க்ஷத்ரிய, வைச்யர்களுக்கு, ஒருவயதிலோ, மூன்றுவயதிலோ சௌளகர்மத்தைச் செய்யவேண்டும்.

10. கர்ப்பத்திலிருந்து எட்டாவது வயதில் பிராமணனுக்கு, பதினொன்றில் க்ஷத்தியனுக்கு, பனிரெண்டில் வைச்யனுக்கு, உபயனம் செய்யப்படவேண்டும்.

R. ஸ்வாமிநாதய்யர்.

॥ श्रीः ॥

॥ आर्यधर्म पत्रिकाभिनन्दन पद्यानि ॥

श्रुत्युक्तौ ध्वस्तशक्तौ बत जडमतिभिः शास्त्रसार्थे हतार्थे
स्वस्वाचारेऽस्तसारे प्रतिदिनमनिशं साधुलोके सशोके ।
दुर्वादे वीतखेदे कलिपुरुषमृषापौरुषे जातपोषे
गौरीशः प्रादुरासीदधिमहि भगवत्पादरूपेण साक्षात् ॥

கலிபுருஷனின் பொய்ப்பெருமை வளர, வேதநெறியும் சாஸ்திரமார்க்கமும் தளர, அவரவருடைய ஆசாரம் மாற, ஸாதுக்களுக்குத் துயரம் ஏற, துர்க்கக்ஷி எங்கும் நேர, இவற்றை அகற்றக்கருதி ஸாக்ஷாத் பரமேச்வரர், ஆதி ஸ்ரீசங்கரபகவத் பாதராக இப்புவியில் அவதரித்தார்.

आदावाधाय तांस्तानतुलनिजवचोवैखरीभिः समन्ता-
च्छिष्यान्नास्तिक्यदूरानविरतमपि तत्संप्रदायप्रवृत्त्यै ।
कृत्वा भाष्याणि तेषां प्रवचनविधये कल्पयित्वा व्यवस्थां
जित्वा दुर्वादिकोटिं श्रितदुरितहरां प्राप काञ्चीं यतीशः ॥

பரமசிவாவதாரபூதர்களான பகவத்பாதாள், தமது சாஸ்திர ப்ரஸங்கத்தால், ஆங்காங்கு பல மேதாவிகளையும், ஆஸ்திகர்களாகவும் தமக்குச் சிஷ்யர்களாகவும் செய்துகொண்டும், தமது அத்வைத ஸித்தாந்தம் எந்நாளும் தழைத்தோங்கிவளரக்கருதிப் பிரம்மஸூத்திரம் முதலியவைகளுக்குச்சிறந்த பாஷ்யங்களைச் செய்தருளியும் இவற்றின் படன பாடனங்களுக்குத் தக்கபடி மடகல்பனம் முதலிய ஏற்பாடுகளைச் செய்தும், துர்வாதிகளை வென்றும், பிறகு ஸகல பாபங்களையும் அடியுடன்விலக்கும் ஸ்ரீகச்சிமாநகரத்துக்கு எழுந்தருளினர்.

सार्वज्ञ्यप्रकटनकर्मणे यतीशः सच्छिष्यैर्मुहुरनुबध्यमान एव ।
श्रीकाञ्चीविलसितकामकोटिपीठीमध्यष्ठादखिलबुधाभिनन्द्यकीर्तिः ।

பின்னர் தமது ஸர்வக்ஞத் (எல்லாம் அறிந்தவர், பரமசிவன்) தன்மையை வெளிப்படுத்தவேண்டும் என்று ஸாதுக்களும் சிஷ்யர்

களும் அடிக்கடி நிர்ப்பந்தமாகப் பிரார்த்திக்கவே, எல்லாப் பண்டிதர்களும் கொண்டாடும் புகழ்பெற்ற யதிச்ரேஷ்டரான ஸ்ரீபகவத்பாதாள், ஸ்ரீகாஞ்சீமஹாநகரியில் விளங்கும் ஸ்ரீகாமகோடி பீடத்தில் அமர்ந்தருளினர்.

श्रीकामकोटिपीठं तदनुग्रहलब्धमहितसंन्यासैः ।
यतिभूपतिभिरनेकैरद्याप्यध्यासितं जयति ॥

ஸ்ரீ பகவத்பாதாளுடைய அனுக்ரஹம்பெற்றுத் துறவறம்பூண்ட பல மஹான்களும் இந்தப் பீடத்தில் எழுந்தருளியிருந்து இந்தப் பீடமானது இன்றுவரை மிக்க மேன்மைபெற்று விளங்கி வருகிறது.

संप्रति तत्पीठपतिर्महनीयगुणोज्ज्वलो यतिश्रेष्ठः ।
शिष्यानुग्रहबुद्ध्या तं तं देशं पुनाति निजगत्या ॥

இப்பொழுது அந்தப்பீடத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆசார்யாள் பாண்டித்யம் ஸௌசீல்யம் வாக்மித்வம்முதலிய பலகுணங்களும் நிறைந்து விளங்குகிறார்கள். இந்த ஆசார்யாள் தமது சிஷ்யர்களுக்கு அநுக்ரஹம்செய்ய நினைத்து ஆங்காங்கு விஜயம்செய்து அந்தந்த பிரதேசங்களைப் பரிசுத்தியுள்ளனவாகச்செய்கின்றார்கள்

त इमे यतिगुरुवर्या धर्मागममर्ममेदुरैश्चतुरैः ।
उपपत्तिमद्भिरुचितैः सर्वानानन्दयन्त्युपन्यसनैः ॥

யதிச்ரேஷ்டர்களான இந்த ஆசார்யாள், ஸநாதன தர்மத்தின் உண்மைப்போக்கை விளக்கியும், தக்கபடி ச்ருதி யுக்தியனுபவங்களை எடுத்துக்காட்டியும் வெகு அழகாக உபந்யாஸம் செய்வதை கேட்போர் யாவரும் ஆனந்தக்கடலில் ஆழ்ந்துவிடுகின்றார்கள்.

यस्मिन्नद्वैतविद्याविभवविवरणप्रौढिमाटीकमाने
खेदो वेदैः समोदैरपि सकलपुराणेतिहासैर्निरासे ।
चार्वाकैः शोकमूकैरजनि विविभिदे बौद्धभेदैः सखेदै-
र्जैनैर्दीनैर्बभूवे समकलि सकलैः कापिलैः क्वापि लीनैः ॥

இந்த ஆசார்யாள், அத்வைதஸித்தாந்தத்தின் உண்மைப்பொருளை உணர்க்கவே, வேதங்கள் புராணங்கள், இதிஹாஸங்கள் ஆகிய

இவற்றின் துயரம் தொலைந்தது. சார்வாகம் முதலிய நாஸ்திகமதங்கள் நிலைகுலைந்துபோயின,

तर्कातर्किपटीयसीभिरभिदासिद्धान्तशुद्धान्तर -
    प्रज्ञामेदुरभूरिसूरिनिकरप्राप्तप्रशंसोक्तिभिः ।
श्रीकाञ्चयञ्चितकामकोट्यधिपतिश्रेष्ठस्य षड्दर्शनी -
    पाण्डित्यं परिचिन्वतीभिरधिकं वाग्भिर्विजेजीयते ॥

இந்த ஆசார்யாளுடைய உபன்யாஸங்களில் ஆறு ஸித்தாந்த (ஷண்மத)ங்களின் உட்கருத்து வெளிப்பட்டு வருவதையும், இதில் காணும் வாக்கு வன்மையையும் கண்டுகளிப்புற்று மஹாமேதாவிகளான அத்வைத பண்டிதர்கள் அனைவரும் எங்கும் கொண்டாடிக் குதூஹலிக்கின்றனர்.

लोकानुकूलं किल धर्मतत्त्वं जानातु सत्कर्म करोतु लोकः ।
इति स्वयालोच्य धिया यतीन्द्रो धर्मप्रचारं बहुधा करोति ॥

உலகத்திற்கு ஹிதமான தர்மத்தின் உண்மையை எல்லாரும் அறிந்துகொண்டு ஸத்கர்மங்களைச் செய்வது உசிதமெனக் கருதி இந்த ஆசார்யாள், பலவழியிலும் தர்மபிரசாரம் செய்கின்றார்கள்.

वाग्मिनश्च विबुधांश्च विश्रुतान् वैदिकेषु पथिषु स्थितान्बहून् ।
आर्यधर्ममुपदेष्टुमादरात्प्रेषयन्ति त इमे ततस्ततः ॥

நமது புராதனமான தர்மத்தை எங்கும் பரவச்செய்ய நினைத்து இந்த ஆசார்யாள், வைதிக தர்மத்தை வழுவாமல் நடத்திவருகிறவர்களும் ப்ரஸித்தர்களும், வாக்கு வன்மையுள்ளவர்களுமான பல பண்டிதர்களை ஆங்காங்கு அனுப்பித் தர்மப்பிரசாரம் செய்விக்கின்றார்கள்,

धर्मप्रचारविधये नैतत्पर्याप्तमिति समालोच्य ।
अवतारयन्ति धर्मप्रकाशिकां पत्रिकां सुचिरात् ॥

ஸநாதன தர்மப்பிரசாரத்திற்கு இவ்வளவுமட்டும் போதாதென்று எண்ணி, இந்த ஆசார்யாள், தர்மவழியை விளக்கிக்காட்டும் "ஆர்யதர்மம்" என்ற வாரப்பத்திரிகையையும் பல வருஷங்களாக நடத்திவரக் கட்டளையிட்டிருக்கின்றார்கள்,

दुर्मतिकलितान्परितो वैदिकसरणीषु दूषणाभासान् ।
श्रुतियुक्त्यनुभवविभवैर्ये दवयितुमीशते सुधियः ॥
पत्राधिपत्यभारं तेष्वासज्ज्य प्रकामधुर्येषु ।
तत्तद्विषयविलेखनपरिपाट्या स्थापयन्ति सद्धर्मम् ॥

துர்புத்திகளானசிலர் நமது வைதிகமார்க்கத்தில் எடுத்துக்காட்டும் போலிக் குற்றங்குறைகளைச் ச்ருதி யுக்தி அநுபவம் இவைகளைக் கொண்டு அடியோடுதகர்த்தெறிய வல்லமைவாய்ந்த மஹாபண்டிதர்களை அவ்வப்போது பத்திரிகாசிரியர்களாக நியமித்து, அவர்களுடைய அரும்பெரும் லேகநங்கள் மூலம், இந்த ஆசார்யாள் ஸநாதந தர்மத்தை நிலைநிறுத்த ஏற்பாடு செய்துவருகிறார்கள்.

श्राद्धतत्त्वमथ जातिनिर्णयं वैदिकस्य बहु कर्मणः फलम् ।
अत्र वीक्ष्य बहुशः प्रकाशितं पण्डितोऽपि नवमेव वेत्स्यति ॥

இந்த ஆர்யதர்ம பத்திரிகையில் வெளியான சிராத்தம் ஜாதி நிர்ணயம் முதலியவிஷயங்களை நன்கு பராமர்சித்தால் பண்டிதர்கள் கூடத்தமக்கு முன்னம் தெரியாத பல புதுவிஷயங்களைத்தெரிந்து கொள்ளக் கூடும்.

अविगणय्य धनव्ययमायतः सुबहुमप्युपकारपरायणैः ।
करुणयाकलिता यतिशेखरैर्विजयतां भुवि धार्मिकपत्रिका ॥

இப் பத்திரிகைக்கு வருவாயைக்காட்டிலும் பதின்மடங்கு அதிகமுள்ள செலவையும் பொருட்படுத்தாமல், உலகத்துக்கு உபகாரம் செய்யவேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் இவ்வாசார்யாள் ஆஜ்ஞாபித்து, இந்த ஆஜ்ஞைப்படி நடந்துவரும் இந்தப்பத்திரிகை நீடூழிகாலம் வாழ்ந்துவருவதாக.

अभेदैकत्वं नः कलयति समस्तेषु सुधियां
विशिष्टैकार्थ्याय प्रकटयति शक्तिं नवनवाम् ।
व्यपेक्षाभावेन प्रसरति च पञ्चाननमतो
जहत्स्वार्था वृत्तिर्जयति यतिवर्यस्य जगति ॥

இவ்வாசார்யாள், புத்திசாலிகளான நமக்கு, எல்லாவற்றிலும் ப்ரம்மைக்ய புத்தி உண்டாகுமாறு உபதேசிக்கிறார்கள், மிகவும்

உத்தமமான ஒரு முக்கியப்பயனை மற்றவர் அடையுமாறு தமது விசித்திரமான பல சக்திகளையும் புதுமை தோன்ற வெளிப்படுத்துகிறார்கள். யாதொரு பயனிலும் கண்வைக்காமல் பரமேசுவராராதனம் செய்தருளி வருகிறார்கள். இவ்வாறு யதிச்ரேஷ்டர்களான இந்த ஆசார்யாளின் சிறிதும் தன்னலம் கலவாத தூய்மையுள்ள பான்மை, உலகத்தில் எல்லாவற்றிலும் மேலானதாக விளங்குகிறது. (இங்கு வியாகரண சாஸ்திரத்தின் ஒரு ஸித்தாந்தமும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனை விரிவுக்கு அஞ்சி இங்கு விவரிக்கவில்லை)

श्रीशारदामठाधीशयतीन्द्रकरुणामयीम् ।
पत्रिकां नव्यबाणश्रीवत्सकृष्णोऽभिनन्दति ॥

ஸ்ரீ சாரதாமடத்தில் ஸ்ரீ காமகோடி பீடத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ ஆசார்யபாதாளுடைய அநுக்ரஹ ரூபமான ஆர்ய தர்மப்பத்திரிகையின் அழகிய உபகாரத்தை நினைந்து நினைந்து, "அபிநவபட்டபாண" "ஸ்ரீவத்ஸ சக்ரவர்த்தி" கிருஷ்ணமாசாரியன் இவ்வாறு புகழுரை பகருகின்றான்

ரா. வே. கிருஷ்ணமாசாரியர்.
ஸம்ஸ்கிருதபண்டிதர்
கவர்மெண்டு காலேஜ், கும்பகோணம்.

சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

தீர்க்கதமஸ்.

1. விசித்ரவீர்ய ராஜன், குழந்தையில்லாமல் இறந்தான். அவனது வம்சம் விருத்தியாகவில்லை. ஆகையால் அவன் தாயான ஸத்யவதி துக்கப்பட்டாள். தனது மூத்தாள் பிள்ளையான பீஷ்மரை அழைத்தாள். நீ விசித்ரவீர்யன் மனைவிகளிடம் குலம் விருத்தி ஆவதற்காகக் குழந்தையை உண்டுபண்ணு என்றாள். அந்த யுகத்தில் அது சாஸ்த்ரஸம்மதமான தர்மம்.

2. ஆனாலும்கூட பீஷ்மர் தான் பெண்முகத்தைப் பார்ப்பதில்லை என்று ஸத்யம் செய்தாரல்லவா? அதற்குப்பங்கம் வருமோ என்று பயந்து தாய்சொன்னபடி செய்யவில்லை. ஆனாலும் தாயின்

இஷ்டம் நிறைவேற ஓர் வழிசொன்னார். அதற்கு உதாஹரண மான கதை ஒன்றையும் சொன்னார்.

3. உதச்யர் என்று ஓர் ரிஷி இருந்தார். அவர் மனைவியின் பெயர் மமதை. இவர் ப்ருஹஸ்பதியின் தமயன். மமதை கர்ப் பமாக இருந்தாள். அச்சமயம் ப்ருஹஸ்பதி அவள்மூலமாக ஓர் குழந்தையைப் படைக்க ஆசைப்பட்டார். மமதையோ, கர்ப்பத் தில் வேறு ஒரு குழந்தை இருப்பதால் இடமில்லை, ஆதலால் வேண்டாமென்றாள். ப்ருஹஸ்பதி பிடிவாதம்செய்தார். கர்ப்பத் திலுள்ள குழந்தையும் வேண்டாமென வேண்டிக்கொண்டது.

4. அதையும் அவர் லக்ஷயம்செய்யவில்லை. தன் சக்தியை உள்ளே அனுப்பினார். உள்ளே இருக்கும் குழந்தை அவர் சக் தியைக் காலால் உதைத்துக் கீழேதள்ளியது. தன் சக்தி கீழே விழுந்தவுடன் ப்ருஹஸ்பதிக்குக்கோபம்வந்தது. உதைத்த அந்த குழந்தையை கண்தெரியாமல்போகும் என்று சபித்தார். ஆகை யால் அதற்கு தீர்க்கதமஸ் என்ற பெயர்வந்தது.

5. தீர்க்கதமஸ் ப்ரத்வேஷி என்ற பெண்ணை மணந்து கொண்டார். கௌதமர் முதலிய பிள்ளைகளைப்பெற்றார். இந்த ரிஷி காமதேனுவின்பிள்ளையினிடமிருந்து பசுக்களின்தர்மத்தைக் கற்றுக்கொண்டார். அதைத் தான் அநுஷ்டிக்க ஆரம்பித்தார். மற்ற ரிஷிகள் இதைப்பார்த்து உண்மையைக் கவனிக்காமல் இவர் பாபியென்று இவரை விலக்கினார்கள்.

6. இதைக்கண்டு தீர்க்கதமஸருடைய மனைவியும் மக்களும் கூட இவரை நிந்தித்தார்கள். உம்மைப் போஷிக்கமுடியாதென் றார்கள். அவர்என்னை அரசனிடம் அழைத்துப்போங்கள் பணம் கொடுப்பான் என்றார். உம்மால்வரும் தநம் அநர்த்தத்தைக் கொடுக்கும். ஆதலால் உம் தநமும் வேண்டாம் நீரும்வேண்டாம் என்றார்கள். ரிஷியோ பெண்களுக்கு ஒரேபர்த்தா அவனை இழந் தால் நரகம் உண்டாகும் என்றார்.

7. ப்ரத்வேஷியும் பிள்ளைகளும் இவரைக் கட்டி ஓடத்தில் ஏற்றி கங்கையில் விட்டுவிட்டார்கள். அவர் பலதேசங்களுக்குச் சென்றார். பலி என்ற அரசன் இவரை அழைத்து, தன் மனைவி மூலமாக குழந்தையுண்டுபண்ணும்படி வேண்டினார். இது ஓர் தர்மகார்யமேதவிர காமவிஷயமல்ல. அரசன் மனைவி, குருடரும் ரிஷியுமான இவரை விரும்பவில்லை. தன் வேலைக்காரியை அலங் கரித்து அனுப்பினாள்.

8. அவளுக்கு ரிஷிமூலமாக கக்ஷீவான் முதலிய பதினொரு பிள்ளைகள் உண்டானார்கள். அரசன் அவர்களைத் தன் பிள்ளைகள் என்று எண்ணினான். ரிஷி ஞானதிருஷ்டியால் இதை அறிந்து அவர்கள் சூத்ரஸ்த்ரீ வயிற்றில் பிறந்தவர்கள், உன்பிள்ளையல்ல என்றார். உடனே அரசன் தன் மனைவியான ஸுதேஷ்ணையை ரிஷியிடமனுப்பினான். அங்கன், வங்கன், கலிங்கன், புண்ட்ரன், சும்ஹன் என்ற குழந்தைகள் பிறந்தார்கள்.

9. அவர்கள் பெயரால் தேசங்கள் உண்டாயின. ரிஷிகள் மேலான வர்ணத்தைச்சேர்ந்தவர். தர்மமே ப்ரதானமான அந்த யுகங்களில் இவர்கள்மூலமாக க்ஷத்ரிய ஸ்திரீகள் குழந்தைகள் பெறுவது, தர்மமாக இருந்தது. ஆதலால் இதைச் சொல்லி பீஷ்மர் எந்த மஹர்ஷிகள் மூலமாகவாவது குலத்தை விருத்தி செய்யக் குழந்தையைப் பெற ஏற்பாடுசெய் என்றார்.

10. பெரியோர் சொன்னபடி செய். அவர் செய்ததைச் செய்யாதே, என்று வேதம்சொல்கிறது. அவர்கள் அதர்மத்தைச் செய்தாலும் அவர்கள் தேஜஸால் அதை அவர்கள் நீக்க சக்தி உள்ளவர்கள். அவர்கள் செய்தபடி நாம்செய்யக்கூடாது. அவர்களிடம் அலக்ஷ்யபுத்தியும் வைக்கக்கூடாது.

வாரவிருத்தாந்தம்.

ஸ்தலமாஹாத்மியம்:— 13உ ஷை விஷயத்தைக் குறித்து சிய்யாழி ஆரம்ப ஆசிரியர் சங்க ஆதரவில் உள்ளூர் தாசீல்தார் ஸ்ரீமான் டி. பி. தாசரா. பி. ஏ. ஓர் அழகான உபன்யாஸம் செய்தார். டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் எச். ராமசந்த்ராவ் பி. ஏ. அக்ராஸநம் வஹித்தார். இந்த ஆஸ்திக உத்யோகஸ்தர்களுடைய மதாபிமாநத்தைக் கொண்டாடுகிறோம். 16உ கூடலூரில் ஸ்ரீ மத்வநவமி விசேஷ வைபவத்துடன் நடந்தது 20உ கும்பகோணத்தில் ஸ்ரீயுத வாங்முக ரத்நகோச உ. வே. நடாதூர் ஸ்வாமிகள் பாகவதாள் மஹிமை என்பதை உபன்யஸித்தார்.

கடமையைச்செய்த தீரர்:— 15உ பாபநாசம் தாலூக்போர்ட் மெம்பர்கள் இந்தியஸ்த்ரீயின் தாலியை உலக நடவடிக்கைக்கு விரோதமாக ஜப்திசெய்தது அதர்மமென அதைக்கண்டித்து ஏக

மாதாக தீர்மாநம் செய்தனர். மதாபிமானத்தால் பல ஜாதியார் கூடிய ஷை ஸபை இதைக்கண்டிக்க முன்வந்தது ச்லாக்யமே; இங்ஙனம் மதாபிமானமுள்ளவர்கள் இந்தியர் என ஒவ்வொரு ஸபையுங்காண்பித்தால் அதர்மத்தைச்செய்ய அரசாங்கம் அஞ்சும்.

ஆலயதர்மம்:— உலக விஷயத்திலீடுபட்டு ஓயாமல் துன்ப முறும் ஜீவர்களது மநதிற்கு சாந்தியை அளித்து இன்பத்தை கொடுப்பது தேவாலய ஸேவை. பற்பல மஹாராஜாக்கள் நம் நாட்டில் பல கோடித்ரவ்யங்களைச் செலவுசெய்து ஆலயங்களைக் கட்டி இருக்கின்றனர். அவ்வாலயங்கள் ஜீர்ணமானுல் அதை உத்தாரணம் செய்வது நமது கடமையாகும், திருநாகேச்வரத்தில் ஓர் ஆலய நிர்மாணத்திற்கு எற்ற முயற்சியை அவ்வூர் ஆஸ்திகர் செய்துவருவதைக்கேட்டு ஸந்தோஷிக்கிறோம்.

ஸ்ரீ ஸாம்ராஜ்யாபிஷேகம்:— 11உ முதல் 21உ வரை நெல்லூருக்கடுத்த செல்லயப்பாளயத்தில் ஷை உத்ஸவம் வெகு விமர்சையாக நடந்தது. பல பக்தர்கள் காலக்ஷேபம் பஜனை பாராயணம் முதலியவைகளைச் செய்தனர். எண்ணிறந்த ப்ராஹ்மண போஜநம் நடந்தது. 108 முறை ஸ்ரீமத் ராமாயணத் தைப் பாராயணம் செய்து முடிவாக இவ்வைபவம் நடப்பது வழக்கம். இப் புண்ய கர்மத்தினுல் ஆஸ்திக்யம் தழைத்து கலகம் அகன்று ராம ராஜ்யம்போல் தேசமிருக்குமென நம்புகிறோம்.

நன்றுகச் சொன்னர்:— 14உ மைசூரில் ஸ்ரீயுத பரகால மடத்துஸ்வாமிகள் தலைமையில் ஸம்ஸ்கிருத கலாசாலை அப்த பூர்த்தி உத்ஸவம் வெகு விமர்சையாக நடந்தது. ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் ராமராவ் ஓர் அழகான உபதேசம் செய்தார். கீர்வாணபாஷைபால் நன்னடத்தையும் சாந்தியு முண்டாகிறது. அதைக் கட்டாயமாகப்படித்து ஸநாதநதர்மத்தைக் கைக்கொள் ளுங்கள் என்றர். இப் பொன்மொழிக்கு விரிவுரை வேண்டுமா? வேண்டுமாயின் ஸம்ஸ்கிருதம் கற்று தர்மத்தை ஆதரியுங்கள்.

தர்மப்ரகாசர் வாழ்க:— மைசூர் மஹாராஜாவால் ஷை பட்டமளிக்கப்பட்டவர் ஸ்ரீமான் தொட்டபாநுமையா என்ற வியாபாரி. அர்த்தமில்லாத சப்தமில்லை இது. பற்பல தர்மத்தை இவர் செய்தபோதிலும் கீர்வாணங்கற்கும் வித் யார்த்திகளுக்கு அன்னமளிக்க 265 ஏகாநிலத்தைத் தர்மமாக

அளித்ததை யார்தான் கொண்டாடாமலிருப்பர்? இத் தர்மசீலர் சிரஞ்சீவியாக வாழ்ந்து மற்றும் பல தர்மத்தைச்செய்க.

பதினாயிரமளித்தார்:— 18௨ ஐக்யமாகாணம் உள்நாட்டு மெம்பர் பதவியிலுள்ள நவாப் முஹம்மது ஹபீபுல்லா ஸாஹிப் அவர்கள் மதனமோஹன மாளவ்யாவின் காசி ஸர்வகலாசாலைக்கு நன்கொடையாக 10 ஆயிரம் ரூபாய்கொடுத்தார். நமது வேத சாஸ்திரங்களையும் ஆங்கிலக்கல்வியையும் போதிக்கும் ஓர் வித்யாலயத்திற்கு அன்யமதஸ்தன் தானம் செய்வதென்பது தற்காலம் எதிர்பாராதஸம்பவம்இவ்வது தானத்தைக்கண்டு ஸந்தோஷிக்கும் தர்மதேவதை அவருக்குத்தக்க ஆசிர்வாதமளிக்கும்.

ஸத் கைங்கர்யம்:— 18௨ திருவண்ணாமலை வாஸிகளான மத்வர்கள் மத்வநவமி அன்று ஸ்ரீமத் ஆஞ்ஜநேயஸ்வாமிக்கு ஓர் விக்ரஹ ப்ரதிஷ்டை செய்தனர். 400 ப்ராஹ்மணர்களுக்கு அன்னதானம் நடந்தது. மத்வமதத்தைப்பற்றி உபன்யாஸங்கள் நடந்தன. ஆஞ்ஜநேயனருளால் பக்தர்களுக்கு க்ஷேமம் உண்டாகுக.

பொறுமை:— 19௨ சென்னை நாராயணமுதலித் தெருவில் உள்ள ஸம்ஸ்கிருத கலாசாலையில் ஷை விஷயம் ஸம்ஸ்கிருதத்தில் ஓர் மாணவனால் உபன்யஸிக்கப்பட்டது பலர் அதை ஆமோதித்து அழகாகப்பேசினர். இவ்விஷயம் பேச்சோடு நில்லாது அநுஷ்டானத்திற்கு வருமாயின் அதைவிட சிறந்த ஸுகம் வேறில்லை எனலாம். ஆகலின் சிறுவயதிலேயே மாணவர்கள் விமதஸ்தர்கள் செயலைப்பொறுக்கும் குணத்தைக் கற்பது மிகநலம்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

புத்தகவரவு—மதிப்புரை.

"வேதலக்ஷண ஸித்தாஞ்சனம்" என்கிற கிரந்தம் எமது பார்வைக்கு வந்தது. இதையியற்றியவர்கள் வம்சபரம்பரையாய் அவிச்சின்ன வித்யா ஸந்ததியில்வந்த அக்னிஹோத்ரம் உ. வே. ஸ்ரீ தாததேசிக தாதாசார்யஸ்வாமியின் புத்திரஇரத்தினமான அக்கினிஹோத்திரம் ராமாநுஜ தாதாசாரியஸ்வாமிகள் ஆவார்கள்.

இந்தக் கிரந்தம் தற்காலம் எழுதவேண்டியதாய் நேர்ந்த ஆவசியத்தைப்பற்றி கிரந்த கர்த்தா அவர்களே முதல் விக்ஞாபனத்தில் விசதமாய்க் கூறியிருக்கிறார்கள். அதிலிருந்து ஒன்று தெரிகிறது. அதாவது பகவான் வேதபுருஷன் தனக்கு அங்க ரக்ஷகர்களாக இக்கிரந்தகர்த்தாவாகிய ஸ்வாமிகளைப்போலவும், இதைப் பார்த்து அகமகிழ்ந்து ஆமோதனபத்திரிகை அனுப்பி இருக்கும் பண்டிதபிரகாண்ட மண்டலீகள் போலவும், அனேகம் மஹானுபாவர்களை நம்பாரத பூமியிலும் வைத்துக்கொண்டிருக்கிறானென்பதேயாம். இந்த விஷயம் மிகவும் ஸந்தோஷப்படக் கூடியதுதான். ஆனால் இங்கு மிகவும் வியஸனப்படவேண்டியது மொன்று இருக்கிறது. அதாவது—வியாக்கியானுதி விசேஷங்களால் பகவான் வேதபுருஷனுடைய ஸர்வாங்கங்களையும் போஷித்துவந்த பெரியோர்களையும் தூஷித்துவிடத் துணிந்தவர்களும் ஓர் மூலையில் தலையை நீட்டுகிறார்களென்பதே. ஸ்ரீ பட்ட பாஸ்காராசாரியார்—ஸ்ரீ வித்தியாரண்ய ஸ்வாமிகளவர்கள்முதலிய வேத பாஷ்யகாரருடைய வித்தியாவைபவத்தை அவர்கள் நாள் முதல் நாளது வரையிலும் வேதத்தில் ஸ்வல்ப்பபாகம் தெரிந்து கொண்டவனானாலும், ஸாங்கமான சதுர்வேதங்களிலும் அர்த்த ஞான—அனுஷ்டான பரியந்தமான பூர்ணபாண்டித்திய முள்ளவனானாலும் எவனாகிலும் புகழ்ந்துதான் பேசிவந்தானே யன்றி இகழ்ந்துபேசினவன் ஒருவனுமில்லையென்று கம்பீரமாய்த் துணிந்து சொல்லலாம். ஒரு வித்தியாஸ்தானத்தையாவது ஒரு புருஷாயுஸ்ஸில் பூர்ணமாய்த் தெரிந்துகொண்டவன் ஒருவன் இருப்பானேயாகில் அவன் எல்லாவிதத்திலும் கொண்டாடத் தக்கவனாவான் என்பது வித்தியாதீர்த்தத்தில் இறங்கினவர்களுக்குத் தெரியாதவிஷயமில்லை. அப்படி யிருக்கையில் பதினான்கு அல்லது பதினெட்டு வித்தியாஸ்தானங்களிலும் பாஷ்யங்களையும், வியாக்கியானங்களையும், சிலவற்றில் ஸ்வதந்திரக் கிரந்தங்களையும் எல்லோருமே ஸாது! ஸாது!! வென்று கொண்டாடத் தக்கவண்ணம் இயற்றி அருளிய ஸ்ரீ வித்தியாரண்ய ஸ்வாமிகள் முதலிய வேதபாஷ்யகாரர்களின் நிந்தாவசனம் கேழ்விப்படும்படியான காலவித்தியாஸம் வந்துவிட்டதைக் கேழ்க்க எந்த வைதிகனுக்குத்தான் கர்ணருந்துதமாயிருக்காது. ''அவர்களுக்கு பத விபாகமும்தெரியாது—பலவிடங்களில் அவர்

கள் மோசம் போய்விட்டார்கள்" என்பதாதியாகப் பிறர் சொல்வதை அனுவதிக்கக்கூட நாவு கூசுகின்றதே! அத்தகைய தூஷணங்களைக் கூசாமல் கூறிவிட எப்படித் துணிந்தார்களோ! தெரியவில்லை. லக்ஷணக்கிரந்தகாரர்களையும்-பண்டிதாஞ்ஜகமாகக் கிரந்தம் செய்யத் தெரியாதவர்களெனக் குறை கூறுகின்றார்களாம். பாமராஞ்சகமாகவே அவர்கள் கிரந்தம்செய்ததாகவே வைத்துக்கொண்டால் இதனால் அவர்களுடைய ஞானத்திற்கென்னகுறை? இப்படியாவது பாமரர்மீது அவர்களுக்குக் கருணை உண்டாயிற்றே என்று சந்தோஷப்படவேண்டியிருக்கையில் அவதூறு சொல்லுவது அழகாயிருக்குமா? பாலர்களுக்கு எளியதோர் வழியில் நுட்பமான விஷயத்தைப் புகட்டுமோர் நூலை ஒருவன் இயற்றினால் பண்டிதனுக்கு இதனாலென்ன பயனென்றிகழ்வதுண்டோ? ஏதோகாரணத்தால் அப்படிப் பிரவிருத்தித்த-காஞ்சீபுரம்— ஸ்ரீ-உ-வே அண்ணங்காசார்யஸ்வாமி எழுதியுள்ள "வேதாத்யயன ஸர்வஸ்வம்" "ஸர்வஸ்வ ஸம்ரக்ஷணீ" என்ற சில தூஷண மொழிகளுக்குத்தக்க ஸமாதானம் கூறி வேத லக்ஷண ஸித்தாஞ்சனகாரர் ஷை வேதலக்ஷண ஸித்தாஞ்சனக் கிரந்தத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஸர்வஸ்வகாரரும் பெரியோர்களைத் தூஷிப்பதில் தாத்பர்யங்கொண்டு ஷை கிரந்தங்களை வெளியிட்டிருக்க மாட்டார்கள். ஆனால் பெரியோர்களிடம் பக்திகொண்டவர்களைப் பரீக்ஷித்துப் பார்க்க இப்படியோர் ஏற்பாடு செய்துவிட்டிருப்பதாகக் குணக்கிராஹிகள் நினைப்பார்கள். ஆகையால் பிராசீனர்களான பாஷ்யகாரர்களிடம் பக்திபுள்ள பண்டிதமணிகள் இந்த— "வேத லக்ஷண ஸித்தாஞ்சனத்" தை முற்றிலும் உற்றுநோக்கிப் பெரியோர்களின் பெருமையைப் பாராட்டுவார்களாக. இந்தப் புத்தகம், கும்பகோணம் அய்யங்கார் தெருவில் வஸிக்கும் ஷை அக்னிஹோத்திரம் ராமானுஜதாதாசாரியஸ்வாமி யிடத்தில் கிடைக்கும். விலை ரூ 1—0—0

பத்திராதிபர்.